ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 2.6 – வேலிக்கோல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.6 – வேலிக்கோல்

‡ வேலிக் கோல் வெட்டி ⋆ விளையாடு வில் ஏற்றி ⋆
தாலிக் கொழுந்தைத் ⋆ தடங்கழுத்தில் பூண்டு ⋆
பீலித் தழையைப் ⋆ பிணைத்துப் பிறகிட்டு ⋆
காலிப் பின் போவாற்கோர் கோல் கொண்டு வா ! ⋆
கடல்நிற வண்ணற்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.1** ‖

கொங்கும் குடந்தையும் ⋆ கோட்டியூரும் பேரும் ⋆
எங்கும் திரிந்து ⋆ விளையாடும் என் மகன் ⋆
சங்கம் பிடிக்கும் ⋆ தடக்கைக்குத் தக்க ⋆ நல்
அங்கம் உடையதோர் கோல் கொண்டு வா ! ⋆
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டு வா ‖ **2.6.2** ‖

கறுத்திட்டெதிர் நின்ற ⋆ கஞ்சனைக் கொன்றான் ⋆
பொறுத்திட்டெதிர் வந்த ⋆ புள்ளின் வாய் கீண்டான் ⋆
நெறித்த குழல்களை ⋆ நீங்க முன் ஓடி ⋆
சிறுக்கன்று மேய்ப்பாற்கோர் கோல் கொண்டு வா ! ⋆
தேவ பிரானுக்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.3** ‖

ஒன்றே உரைப்பான் ⋆ ஒரு சொல்லே சொல்லுவான் ⋆
துன்று முடியான் ⋆ துரியோதனன் பக்கல் ⋆
சென்றங்குப் பாரதம் ⋆ கை எறிந்தானுக்கு ⋆
கன்றுகள் மேய்ப்பதோர் கோல் கொண்டு வா ⋆
கடல் நிற வண்ணற்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.4** ‖

சீர் ஒன்று தூதாய்த் ⋆ துரியோதனன் பக்கல் ⋆
ஊர் ஒன்று வேண்டிப் ⋆ பெறாத உரோடத்தால் ⋆
பார் ஒன்றிப் பாரதம் ⋆ கைசெய்து பார்த்தற்குத் ⋆
தேர் ஒன்றை ஊர்ந்தாற்கோர் கோல் கொண்டு வா ⋆
தேவ பிரானுக்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.5** ‖

ஆலத்திலையான் ⋆ அரவின் அணை மேலான் ⋆
நீலக் கடலுள் ⋆ நெடுங்காலம் கண் வளர்ந்தான் ⋆
பாலப் பிராயத்தே ⋆ பார்த்தர்க்கருள் செய்த ⋆
கோலப் பிரானுக்கோர் கோல் கொண்டு வா ! ⋆
குடந்தைக் கிடந்தாற்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.6** ‖

பொன் திகழ் ⋆ சித்திர கூடப் பொருப்பினில் ⋆
உற்ற வடிவில் ⋆ ஒரு கண்ணும் கொண்ட ⋆ அக் -
கற்றைக் குழலன் ⋆ கடியன் விரைந்துன்னை ⋆
மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா ! ⋆
மணிவண்ண நம்பிக்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.7** ‖

மின்னிடைச் சீதை பொருட்டா ⋆ இலங்கையர் ⋆
மன்னன் மணிமுடி ⋆ பத்தும் உடன் வீழத் ⋆
தன் நிகர் ஒன்றில்லாச் ⋆ சிலை கால் வளைத்திட்ட ⋆
மின்னு முடியற்கோர் கோல் கொண்டு வா ! ⋆
வேலை அடைத்தாற்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.8** ‖

தென் இலங்கை மன்னன் ⋆ சிரம் தோள் துணிசெய்து ⋆
மின் இலங்கு பூண் ⋆ விபீடண நம்பிக்கு ⋆
என் இலங்கு நாமத்தளவும் ⋆ அரசென்ற ⋆
மின் அலங்காரற்கோர் கோல் கொண்டு வா ! ⋆
வேங்கட வாணர்க்கோர் கோல் கொண்டு வா ‖ **2.6.9** ‖

‡ அக்காக்காய் நம்பிக்குக் ⋆ கோல் கொண்டு வா என்று ⋆
மிக்காள் உரைத்த சொல் ⋆ வில்லிபுத்தூர்ப் பட்டன் ⋆
ஒக்க உரைத்த ⋆ தமிழ் பத்தும் வல்லவர் ⋆
மக்களைப் பெற்று ⋆ மகிழ்வர் இவ்வையத்தே ॥ **2.6.10** ॥

அடிவரவு — வேலி கொங்கு கறுத்திட்டு ஒன்றே சீர் ஆலத்து பொன்திகழ் மின்னிடை தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை

வேலிக்கோல் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்